பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 105** **நாள்: 08.09.2017**

**கூவம் ஆற்றுப்படுகையில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றப்பட்டு, மாற்று ஏற்பாடாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகள் வழங்கப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

கூவம் ஆற்றுப்படுகையில் ஆக்கிரமிப்பு வீடுகள் இன்று (08.09.2017) அகற்றப்பட்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள மாற்று வீடுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வளசரவாக்கம் மண்டலம், வார்டு–144, கூவம் ஆற்றுப்படுகையில் 347 ஆக்கிரமிப்பு வீடுகள் கண்டறியப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, அங்கு வசிக்கும் குடும்பங்களுக்கு தகுந்த மாற்று ஏற்பாடாக கூடப்பாக்கம் திருமழிசை நகரில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதனை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பேசும்பொழுது தெரிவிக்கையில், சென்னை நதிகள் பாதுகாப்பு அறக்கட்டளை ஆற்றுப்படுக்கையில் விரிவான ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தன் அடிப்படையில், நீர்வழித்தடங்களான கூவம் மற்றும் அடையாறு பகுதிகளில் மறுசீரமைப்பு செய்து பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காகவும், வெள்ளம் பாதிக்கும் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கும், நிலையில்லாத கட்டுமான குடியிருப்புகளில் இருக்கும் பொதுமக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு ஆற்றுப்படுகைகளில் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், அவர்களுக்கு தகுந்த மாற்று ஏற்பாடாக குடியிருப்பு வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டதன் அடிப்படையில், கடந்த 2015ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது 13,972 வீடுகள் ஆற்றுப்படுகையில் இருப்பது கண்டறியப்பட்டது. ஏற்கனவே அடையாறு ஆற்றுப்படுகையில் 5000 வீடுகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக பெரும்பாக்கத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது, கூவம் ஆற்றில் மதுரவாயல், எம்.எஸ்.பி. நகரில் 347 ஆக்கிரமிப்பு வீடுகள் கண்டறியப்பட்டது. அவர்களுக்கு கூடப்பாக்கம் திருமழிசை நகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 400 சதுர அடியில் ரூ.16 இலட்சம் மதிப்பிலான வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களது வீடுகளில் உள்ள பொருட்களை ஏற்றி இறக்கி வைப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் வாகன வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு வாகனத்திற்கு 4 நபர்கள் வீதம் 100 பணியாளர்கள் மற்றும் 25 லாரிகளும், இந்தக் குடும்பங்களுக்கு 3 நாட்களுக்கு தேவையான உணவு வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 177 மாணவர்கள் கண்டறியப்பட்டு அவர்களை அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடமாற்றும் பணியினை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியின் போது ஏதேனும் சிகிச்சை தேவைப்படும் என்பதனை கருத்தில் கொண்டு மருத்துவ முகாமும் நடைபெற்று வருகிறது.

பொதுமக்களின் ஒத்துழைப்போடு இப்பணியை மேற்கொள்ள தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட பகுதியில் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு அப்பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்போடு இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பின் போது விடுபட்டவர்களை கண்டறிவதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் விண்ணப்பங்கள் பெறும் பணி நடைபெற்று வருகிறது. விண்ணப்பங்களின் ஆய்வுக்குப்பின் தகுதி2வாய்ந்தவர்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆக்கிரமிப்பு அகற்றும் பணியானது காவல்துறை, வருவாய்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை போன்ற துறைகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர் (தெற்கு) திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., சென்னை மாநகர கூடுதல் ஆணையாளர் திரு.எம்.ஜெயராம், இ.கா.ப., துணை ஆணையாளர் (அண்ணாநகர் காவல் சரகம்) டாக்டர்.சுதாகர், இ.கா.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**